## இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
### 06 நவம்பர் 2015 / 24 முஹர்ரம் 1437

## <u>கல்வியறிவின் மூலம் நமது “ஈமான்” மற்றும் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்வது</u>

اَلْحَمْدُ لِلّٰهِ الْمَلِكِ الْحَقِّ الْمُبِيْنِ الَّذِي أَبَانَ لِعِبَادِهِ مِنْ آيَاتِهِ مَا
بِهِ عِبْرَةً لِلْمُعْتَبِرِيْنَ وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللّٰهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ
لَهُ إِلَهَ الأَوَّلِيْنَ وَالآخِرِيْنَ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّداً عَبْدُهُ
وَرَسُوْلُهُ الْمَبْعُوثُ رَحْمَةً لِلْعَالَمِيْنَ. اَللّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا
مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيماً كَثِيْرًا . أَمَّا بَعْدُ فَيَا
عِبَادَ اللّٰهِ اتَّقُوْا اللّٰهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ مُسْلِمُوْنَ.

மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது ”தக்வா” எனும் பக்தியை அதிகரித்துக் கொள்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கும் அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும், அவன் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பக்கம் நம்மை

நெருக்கமாக்கிக் கொள்ள வேண்டுமென்ற நமது எண்ணத்தை மேற்கொண்டு சிறப்பாக்கிக் கொள்வோமாக!

ஜமாஅத்தார்களே!

கடந்த வாரம், இறைத்தூதர்(ஸல்) அவர்கள் மீது ஆழமான அன்பு கொள்வதால் கிடைக்கும் பலன்கள் யாவை என்பதைப் பற்றியும், இறைத்தூதர்(ஸல்) அவர்களின் சிறந்த நன்னடத்தைகள் மற்றும் அவர்களின் நேர்மையானச் செயல்பாடுகளை ஆர்வமாகப் பின்பற்றுவதன் அவசியத்தைப் பற்றியும் "கதீப்" (பிரசங்கம் செய்தவர்) அவர்கள் நமக்கு நினைவூட்டினார்கள். இன்று, இறைத்தூதர்(ஸல்) அவர்களின் மற்றொரு முன்மாதிரியான நன்னடத்தையை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இமாம் அபூதாவூத் (ரஹ்) பின்வரும் ஹதீதை தனது ஹதீதுக் கிரந்தத்தில் பதிவு செய்துள்ளார்கள்:

ஒருமுறை, ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் முஆதுப்னு ஜபல் (ரலி) அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு: "முஆதே! அல்லாஹ்வின் ஆணையாக நான் உம்மை நேசிக்கிறேன்; முஆதே! ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும் இந்த துஆவை (பிரார்த்தனையை) ஓத மறந்து விட வேண்டாம் என உமக்கு நான் உபதேசிக்கின்றேன்" என்று கூறினார்கள். அந்த துஆ:

اللَّهُمَّ أَعِنِّي عَلَى ذِكْرِكَ وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ.

பொருள்: யா அல்லாஹ்! உன்னை நினைவு கூர்வதற்கும், உனக்கு நன்றி செலுத்துவதற்கும், உன்னை மிகவும் சிறப்பாக வணங்கி வழிபடுவதற்கும் எனக்கு உதவி செய்வாயாக!

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

மேற்கண்ட ஹதீது, நாம் சிந்தித்துப் பார்ப்பதற்கான பல பயனுள்ள பாடங்களை நமக்குப் போதிக்கின்றது. முதன்முதலாக, இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள், தன்னோடு இருந்தவர்கள், குறிப்பாக, இளைஞர்கள் மற்றும் பதின்ம வயதினர்கள் விஷயத்தில் எந்த அளவு அக்கறை கொண்டிருந்தார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ரசூலுல்லாஹி(ஸல்), மிகவும் மென்மையாகவும் ”இஹ்சான்” எனும் கருணைச் சிந்தனையுடனும் அவர்களிடம் பேசினார்கள். அதன் காரணமாக, அந்த இளைஞர்கள் அவர்களின் கருத்தை காது தாழ்த்திக் கேட்டார்கள்.

அதே சமயம், மேற்கண்ட ஹதீது, இளைஞர்களுக்கு ”அவர்கள் தொடர்ந்து அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பக்கம் தம்மை நெருக்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்” என்று நினைவூட்டுவதிலும் வழிகாட்டு வதிலும் நாம் ஆர்வமற்றவர்களாக, கடமையுணர்வு இல்லாதவர்களாக இருக்கக்கூடாது எனவும் நமக்கு நினைவூட்டுகிறது.

இவ்விஷயத்தில், நாம் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவது அவசியமாகும். இளைஞர்கள் உறுதியான ”ஈமான்” (ஓரிறை நம்பிக்கையையும்), ”அக்லாக்” (அழகிய நற்பண்புகளையும்) பெற்றுத் திகழ்வதற்கு, அவர்களிடம் கல்வியறிவும் சன்மார்க்க வழிகாட்டுதலும் காணப்பட வேண்டுமென்பதில் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் ஆர்வமிக்கவர்களாக இருந்தார்கள். இவ்விஷயத்தில் பொறுமையையும் கடைப்பிடித்தார்கள்.

நம்முடன் நெருக்கமாக இருப்பவர்களிடம் கல்வியறிவையும் சன்மார்க்கச் செயல்பாடுகளையும் அதிகரிப்பதற்கு நாம் எவ்வாறெல்லாம் பங்காற்ற

முடியும் என நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். கல்வியறிவும் இல்மும் நமது அகீதா (கொள்கை) மற்றும் "ஈமான்" உறுதியாகுவதற்குத் தேவையான முக்கிய அம்சங்களாக உள்ளன. கல்விமான்களின் சிறப்பைப் பற்றி அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அல்-ஹஜ்" எனும் அத்தியாயத்தின் 54-வது வசனத்தில் கூறுகிறான்:

وَلِيَعْلَمَ ٱلَّذِينَ أُوتُوا۟ ٱلْعِلْمَ أَنَّهُ ٱلْحَقُّ مِن رَّبِّكَ فَيُؤْمِنُوا۟
بِهِۦ فَتُخْبِتَ لَهُۥ قُلُوبُهُمْ ۗ وَإِنَّ ٱللَّهَ لَهَادِ ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ إِلَىٰ صِرَٰطٍ
مُّسْتَقِيمٍ ٥٤

பொருள்: மேலும், திண்ணமாக இவ்வேதம் உம்முடைய அதிபதியிடமிருந்து வந்த உண்மையாகும் என்பதை அறிவு வழங்கப்பட்டவர்கள் அறிந்து கொள்வதற்காகவும், இதன் மீது அவர்கள் நம்பிக்கை கொள்வதற்காகவும், மேலும், அவர்களின் இதயங்கள் அவன் முன் பணிந்து விடுவதற்காகவும்தான் (இவ்வாறெல்லாம் நிகழச் செய்தான்). உறுதியாக, அல்லாஹ் இறைநம்பிக்கை கொண்டவர்களுக்கு என்றென்றும் நேர்வழியைக் காண்பிக்கக் கூடியவனாக இருக்கின்றான்.

மேற்கண்ட வசனத்தில், ஒருவர் தனது ஓரிறை நம்பிக்கையையும், தன்னம்பிக்கையையும் பலப்படுத்திக் கொள்வதற்கான சாதனங்களில் ஒன்றாக கல்வியறிவு உள்ளது என அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா

சுட்டிக் காட்டுகிறான். கல்வியறிவானது, புத்தகங்களிலோ அல்லது ஆன்-லைன்களிலோ காணப்படும் அளவுக்கதிகமான சன்மார்க்கத் தகவல்களை மதிப்பீடு செய்வதற்கான ஆற்றலையும் வழங்குகிறது. ஒரு கல்வியறிவுமிக்க தனிநபர் உண்மையை, பொய்களிலிருந்தும், சந்தேகமானத் தகவல்களிலிருந்தும் சல்லடை போட்டு பிரித்து எடுக்கும் ஆற்றலைப் பெறுகிறார். இதற்காகத் தான் ஒவ்வொரு தனிநபரும் சன்மார்க்கக் கல்வியறிவைப் பெறுவது அவசியமாக உள்ளது. ஒருவர் நேர்வழி பெறுவதற்கும் வழிகெட்டுப் போகாமலிருப்பதற்கும் கல்வியறிவு தான் காரணமாக உள்ளது. நமது வாழ்க்கைக்கு, நோக்கமும் இலக்கும் உள்ளது; நமது வாழ்க்கை சிறந்த மதிப்பீடுகளால் வழி நடத்தப்பட வேண்டும் எனச் சுட்டிக் காட்டி, உறுதி செய்வதும் கல்வியறிவு தான்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

ஒவ்வொரு முஸ்லிமும் தனது மார்க்கத்தை அறிந்து கொள்வது அவசியமாக உள்ளது. சன்மார்க்கச் செயல்பாடுகளைச் செயல்படுத்துவதில் கண்மூடித்தனமாக நாம் நடந்து கொள்ள முடியாது. அல்ஹம்துலில்லாஹ்! (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தாகுக!). இன்று, வாரம் முழுவதும் எண்ணற்ற சன்மார்க்க வகுப்புகள் பல பள்ளிவாசல்களிலும் தனியார் மையங்களிலும் நடைபெற்று வருவதைக் காண்கிறோம். கவலைக்குரிய விஷயம் யாதெனில், நமது குடும்பத்தார்கள் மற்றும் நண்பர்களில் இன்னும் எத்தனையோ நபர்கள் இந்த வகுப்புகளுக்கு ஆஜராகாமலும், இவ்வகுப்புகளில் பகிர்ந்து கொள்ளப்படும் பல்வேறு சன்மார்க்கக் கல்வியறிவைக் கற்காமலும் இருப்பதாகும்.

எனவே, நாம் இவ்விதமான குடும்ப உறுப்பினர்களையோ அல்லது நண்பர்களையோ பெற்றிருந்தால், இஸ்லாமியக் கல்வியறிவை வழங்கும் நிகழ்ச்சிகள், வகுப்புகள் மூலமாக பலனடைவதற்கு அவர்களை எப்படி ஆர்வப்படுத்த முடியும் எனச் சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்க வேண்டும். இவ்வுலகில் அவர்கள் பல நலன்களை அடைய வேண்டும் என நாம் எவ்வாறு விரும்புகிறோமோ, அவ்வாறே, நமது குடும்பத்தார்களும் நண்பர்களும் இம்மை, மறுமை இரண்டிலும் வெற்றிகளையும் நன்மைகளையும் அடைவதற்கான வாய்ப்புகளையும், அவற்றின் வாசல்களையும் நாம் திறப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

நமது குடும்ப உறுப்பினர்களில் அல்லது நண்பர்களில் எவராவதொருவர் சன்மார்க்க வகுப்புகளுக்குச் செல்ல இன்னும் வெட்கப்பட்டுக் கொண்டிருந்தால் ARS (Asatizah Recognition Scheme) எனும் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியரை அவருக்கு அறிமுகம் செய்து வையுங்கள். அல்லது நமது குடும்பத்தார்களையும் நண்பர்களையும் நமது வீட்டில் ஒன்று சேர்த்து, அந்த ஆசிரியர்களை அங்கு வரவழைத்து, அவர்களின் கல்வியறிவைப் பகிர்ந்து கொள்ள வைக்கலாம். நாம் ஆலிமாக இல்லாவிட்டாலும் கூட, அல்லாஹ் மற்றும் அவனது தூதர்(ஸல்) அவர்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை நமது குடும்பத்தார்களுக்கும் நண்பர்களுக்கும் ஏற்படுத்தலாம்.

அதே சமயம், நம்மிடம் ஏற்கனவே சன்மார்க்கத்தின் அடிப்படைக் கல்வியறிவு இருக்குமெனில், நமது கல்வியறிவையும் விளக்கத்தையும் மேற்கொண்டு அதிகரித்துக் கொள்ள முயற்சிக்கலாம். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் பின்வரும் ஹதீதில் எவர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்களோ

அவர்களில் ஒவராக ஆகும் விருப்பம் நமக்கில்லையா? ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்:

"அல்லாஹ் யாருக்கு நன்மையை விரும்புகிறானோ, அவருக்கு சன்மார்க்கத்தை விளங்குவதற்கான வாய்ப்பை வழங்குவான்" (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்)

நபி(ஸல்) அவர்கள் மேற்கண்ட ஹதீதில் நவின்றுள்ள நபர்களில் நாமும் ஆகுவதற்கு கடின முயற்சி செய்வோமாக! அவர்களின் உள்ளங்கள் கல்வியறிவால் நிரப்பமாக இருக்கும்; இஸ்லாத்தை ஆழமாகப் புரிந்து கொள்வதன் மூலமாக அவர்கள் நேர்வழி காட்டப்படுவார்கள். பல ஆசிரியர்களிடம் கற்பதன் மூலம் நமது சன்மார்க்கக் கல்வியறிவை விசாலமாக்கிக் கொள்வோமாக! இஸ்லாமியக் கல்வி மற்றும் கலாச்சாரச் செல்வத்தின் அருமையை உணர்வோமாக!. குறிப்பாக, நாம் கற்றதைச் செயல்படுத்த முயல்வோமாக! காரணம், பெற்றோர்களாகிய நாம் நமது பிள்ளைகளை சன்மார்க்க வகுப்புகளுக்கு அனுப்புவதில் மட்டும் ஆர்வம் செலுத்தி விட்டு, அப்பிள்ளைகள், தாம் கற்றதைச் செயல்படுத்த ஆர்வமூட்டும் சூழ்நிலைகளை நமது வீடுகளில் ஏற்படுத்தத் தவறினால் நமது முயற்சிகள் பயனற்றுப் போகலாம்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

கல்வியறிவின் மீது நமக்கு ஆழமான மோகம் ஏற்பட வேண்டுமென அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம் வேண்டிக் கொள்வோமாக! நமக்கும் நமது குடும்பத்தார்களுக்கும் அல்லாஹ்வின் நேர்வழி கிடைக்கட்டுமாக! அல்லாஹ் நமது பாசத்திற்குரிய சமுதாயத்தைப் பாதுகாப்பானாக! நமது பாசத்திற்குரிய ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களால்

கொண்டு வரப்பட்ட அவனது ஷரீஅத்தின் பால் நமக்கு வழிகாட்டுவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُولُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.